**MCOP.No.436/2024 ம.சா.1 -தேன்மொழி – 08.07.2025**

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை. எனது கணவர் இறந்தது தொடர்பாக நான் தென்னிலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நீங்கள் பொய்யாக புகார் கொடுத்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்டுவதற்குண்டான காப்பீடு மற்றும் ஓட்டுநர் உரிமம் காலாவதி ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், காப்பீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தென்னிலை காவல் நிலையத்தில் உங்கள் கணவர்தான் விபத்துக்கு காரணம் என்று சொல்லி அவர் மீதுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கை, வரைபடம் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் உங்களுக்கு எதிராக உள்ளதால்தான் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் மைக்செட் நடத்தி வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

உங்கள் கணவர் மாதம் ரூ.40,000/- மைக்செட் வைத்து வருமானம் ஈட்டி வந்தார் என்பது வழக்கிற்காக பொய்யாக சொல்வது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் உங்கள் கணவர்தான் TVS 50 யை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், வேகமாகவும் ஓட்டிச்சென்று பேரூந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பேரூந்து ஓட்டுநர் காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் பேரூந்து ஓட்டுநர் சாலை விதியை கடைபிடித்து வாகனத்தை மெதுவாக ஓட்டிச் சென்றார் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர்தான் காரணம் என்பதால் எவ்வித இழப்பீடும் பெற கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.